V

# மாதத் தேர்வு - ஆகஸ்ட் 2019

## ஆறாம் வகுப்பு

Reg.No.

## அறிவியல்

நேரம்: 1.30 மணி மதிப்பெண்கள்: 30

### பகுதி - அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 6 x 1 = 6

1. ஒரு அளவை அளவிடும் முறைக்கு ________ என்று பெயர்.
   a) இயல் அளவீடு b) அளவீடு c) அலகு d) இயக்கம்
2. நிலவில் ஈர்ப்பு விசை புவியைப் போல ________ ல் ஒரு பங்கு.
   a) ஏழு b) ஐந்து c) ஆறு d) பத்து
3. ________ என்பது பருப்பொருளால் ஆனது அல்ல.
   a) தங்க மோதிரம் b) இரும்பு ஆணி c) ஒளி d) எண்ணெய்த் துளி
4. நீரை உறிஞ்சும் பகுதி ________ ஆகும்.
   a) வேர் b) தண்டு c) இலை d) பூ
5. இலைத் துளையின் முக்கிய வேலை ________.
   a) நீரைக் கடத்துதல் b) நீராவிப் போக்கு c) ஒளிச்சேர்க்கை d) உறிஞ்சுதல்
6. பல நாட்கள் நீர் அருந்தாமல் உயிர் வாழக்கூடிய விலங்கு ________.
   a) நாய் b) யானை c) மாடு d) ஒட்டகம்

### பகுதி - ஆ

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி (குறுகிய வினா):** 7 x 2 = 14

7. அளவீடு - வரையறு.
8. பொருத்துக:
   a. நீளம் - வினாடி
   b. நிறை - லிட்டர்
   c. காலம் - கிலோ கிராம்
   d. திரவத்தின் பருமன் - மீட்டர்
9. சரியா? தவறா? என எழுதுக.
   a) நிறையை 126 கி.கி எனக் கூறுவது சரியே.
   b) ஒருவரின் மார்பளவை அளவுகோல் பயன்படுத்தி அளவிட முடியும்.
10. கலவைகளை நாம் ஏன் பிரிக்க வேண்டும்?
11. பருப்பொருள் என்றால் என்ன?
12. நிரப்புக:
   a) நீரில் இருந்து களிமண் துகள்களை நீக்க ________ முறை பயன்படுத்தப்படுகிறது.
   b) ஊசி, பென்சில் மற்றும் இரப்பர் வளையம் இவற்றில் ________ காந்தத்தால் கவரப்படும்.
13. வாழிடம் என்பதை வரையறு.
14. சில பாலைவனத் தாவரங்களின் பெயர்களை எழுதுக.
15. ஆணி வேர்த் தொகுப்பின் படம் வரைந்து பாகங்களை எழுதுக.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



16. தகவமைப்பு என்றால் என்ன?

17. 'வலசை போதல்' என்றால் என்ன?

18. ஒரு செல் மற்றும் பல செல் உயிரினங்களுக்கு சில உதாரணங்கள் தருக.

பகுதி - இ

**III. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினா வீதம் இரண்டு வினாக்களுக்கு விடையளி:**

*(தேவையான இடங்களில் படங்கள் வரைக)* 2 x 5 = 10

பிரிவு - 1

19. ஒழுங்கற்ற திடப்பொருளின் பருமனை எவ்வாறு கண்டறிவாய்? படத்துடன் விவரி.

20. பாலில் இருந்து பாலாடைக் கட்டியை எம்முறையில் பெறுவாய்? விளக்கவும்.

பிரிவு - 2

21. கீழே கொடுக்கப்பட்டுள்ள தாவர அமைப்பின் படத்தை மீண்டும் வரைந்து பாகங்களைக் குறிக்கவும்.



22. 'பாலைவனக் கப்பல்' என்றழைக்கப்படும் விலங்கு எது? அதன் தகவமைப்புகளை விளக்குக.

******